ஆக்கம்: ஆசிரியை A.M.F. நஸ்ரின்
கே/ கேகாலை சாஹிரா மகா வித்தியாலயம்

## பங்குச் சந்தை

**பங்குகள், பங்குலாபம்**

கணேசன் கம்பனி ஒன்றில் ரூபா 30 வீதம் 500 பங்குகளை கொள்வனவு செய்கிறார் எனின்,

I. அவர் முதலீடு செய்த தொகை = ரூபா 30 X 500

= ரூபா 15000

∴ கம்பனி ஆண்டுப் பங்குலாபம் ஒரு பங்கிற்கு ரூபா 3 வழங்கப்படுமெனின்

II. கணேசனின் ஆண்டு வருமானம் = ரூபா 3 X 500

= ரூபா 1500

**மூலதன இலாபம்**

III. கணேசன் தன்னிடமுள்ள பங்குகளின் சந்தை விலை ரூ35 ஆக உயரும்போது பங்குகள் அனைத்தையும் விற்கிறார்.

∴ அவர் அடையும் மூலதன இலாபம் யாது?

பங்குகளை விற்பதால் கிடைக்கும் தொகை = ரூபா 35 X 500

= ரூபா 17500

மூலதனம் = பங்குகளின் விற்பனை விலை - பங்குகளின் கொள்விலை

= ரூபா 17500 – 15000

= ரூபா 2500

வினா.

ஒரு வியாபாரி சந்தை விலை ரூபா 40 ஆகவுள்ள ஒரு குறித்த கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 40000 ஐ முதலீடு செய்தவர். ஓர் ஆண்டின் பின்னர் அவர் இட்ட பணத்தின் 10% ஐ பங்கிலாபமாக பெற்றார். அவ்வருமானத்தை பெற்ற பின்னர் ஒரு பங்கு ரூபா 50 வீதம் எல்லாப் பங்குகளையும் விற்கின்றார்.

1. வியாபாரி கம்பனியிடமிருந்து பெற்ற துண்டுப் பங்கிலாபம் யாது?
2. கம்பனி ஒரு பங்கிற்காக ஆண்டு தோறும் செலுத்திய பங்கிலாபம் யாது?
3. வியாபாரி பங்குகளை விற்பதன் மூலம் பெற்ற பணத்தைக் காண்க.
4. வியாபாரிக்கு கிடைக்கும் மூலதன இலாபம் யாது?